தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21-9-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழகத்தில் தொழிற்சாலை சார்ந்த வேளாண் காடுகள் திட்டத்தை ஊக்கவிக்க வேளாண் பல்கலையில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சென்னையில் உள்ள செஞ்சுரி பிளைபோர்ட்ஸ் (இ) லிமிடட் (ஷெரான் பிளை) இவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் முனைவர்.C.R. ஆனந்தகுமார், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் திரு.விஷ்ணு கேமானி, நிர்வாக இயக்குநர், செஞ்சுரி பிளை போர்ட்ஸ் (இ) லிமிடட் இடையே முனைவர். கு. இராமசாமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர் ஹெ. பிலிப், இயக்குநர், வேளாண் விரிவாக்கம், முனைவர்.க.கு.சுரேஷ், முதல்வர் (வனவியல்) அவர்கள் முன்னிலையில் 20-9-2016 அன்று வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தொழிற்சார் வேளாண் காடுகள் கூட்டமைப்பின் (CIAF) முதலாம் ஆண்டு கருத்தரங்கில் கையெழுத்தாகியது.

மரம் மற்றும் மரம் சார்ந்த பொருட்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்தியாவில் மரங்களின் தேவை 2020 ஆம் ஆண்டுகளில் சுமார் 150 மில்லியன் கன மீட்டர் என கணக்கிடப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு தேசிய வனக்கொள்கையின்படி பாதுகாக்கப்பட்ட வனங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் பெருவது மிகவும் குறைந்துள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தொழிற்சாலைகளுக்கு தங்கு தடையின்றி மூலப்பொருட்கள் கிடைக்கவும், விவசாயிகளுக்கு வேளாண் காடுகள் சம்பந்தமான தொழில்நுட்பம் மற்றும் சரியான சந்தை விலை நல்ல விலை கிடைக்கவும் வேளாண்காடுகள் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இக்கூட்டமைப்பின் மூலம் தரமான நாற்றுகள் உருவாக்குதல் முதல் மரம் கொள்முதல் வரை சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் ஒருங்கிணைந்து வேளாண்காடுகள் வளர்ப்பில் ஒரு புதுமையை பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. இந்த நிகழ்ச்சியில் துணைவேந்தர் முனைவர் கு.இராமசாமி பேசுகையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களைக் கொடுப்பதுடன் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் தொழிற்சாலைகள் வாங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறு விவசாயிகள் உணவுப் பயிர்களுடன் வரப்பு ஓரங்களில் மரப்பயிர்களை ஒருங்கிணைந்து பயிர்செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில் மரம் சார்ந்த தொழிற்சாலைகள், விஞ்ஞானிகள், காப்பீட்டு நிறுவனங்கள், வங்கிகள், இதர துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள், மர அறுவடை மற்றும் விற்பனைக்குழுக்கள், நிதி மற்றும் கிராமப்புற நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு துறைகளிலிருந்து 200 பிரதிநிதிகள் ஆறு மாநிலங்களில் இருந்து கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்